ஜநவிநோதிநி.

இல. 12.] டிசெம்பர்மீ 1877. [புஸ்த. VIII.

பார்லிமெண்டு சபை.

இப்போது நடந்துவருகிற இங்கிலீஷ் துரைத்தனமானது இக்காலத்தில் இவ்வுலகத்திலுள்ள மற்ற ராஜாங்கங்கள் எல்லாவற்றையும் விட விசேஷமாய்ச் சீர்திருத்தமும் நாகரிகமும் மேம்பாடும் பெற்று, இந்த இங்கிலீஷ் ராஜ்யத்தில் சூரியன் ஒருநாளும் அஸ்தமிப்பதில்லையென்று சொல்லி யாவரும் வியக்கும்படி இப்பூமியின் நாற்புறமும் பரந்து ஒப்பு உயர்வு இல்லாமல் விளங்குகின்றது.

இங்கிலாந்துதேசத்தில் இந்த இங்கிலீஷ் துரைத்தனத்துக்கு முக்கியாதாரமான நிபந்தனைகள் சில உண்டு. 1-வது. பரம்பரையாய் ஒரேவமிசத்து அரசர்கள் அளவிட்ட அதிகாரத்தைக்கொண்டு செங்கோல்செலுத்தவேண்டும். 2-வது. பார்லிமெண்டு என்று பேர்பெற்ற மந்திராலோசனைச் சபையாருடைய சம்மதியில்லாமல் அவ்வரசர்கள் வரிபோடவும் புதுச்சட்டங்கள் ஏற்படுத்தவுங் கூடாது. 3-வது. அநியாயமாய் ஒருவனை அபராதஞ்செலுத்தச் செய்யவும், சிறைசெய்யவும், ஒருவனுடைய பொருளையாவது சுதந்தரத்தையாவது கெடுக்கவும், நியாயமான விசாரணையில்லாமல் ஒருவனை எவ்வகையாயாவது தண்டிக்கவும் கூடாது. 4-வது. வழக்குகளைப்பற்றி விசாரிக்கவேண்டுவதாயிருந்தால் நியாயாதிகாரிகளுக்குத் துணையாக ஜூரி என்னும் மத்தியஸ்தரை ஏற்படுத்தியே விசாரிக்கவேண்டும். 5-வது. நியாயத்தை விலைகொடுத்து வாங்கவும் தீர்ப்பு சீக்கிரத்தில் சொல்லாமல் வீணாய் நாள் ஓட்டவுங்கூடாது.

இப்படி முக்கியமாய் ஐந்துவிதமான தர்ம நீதிகளையுடைய இங்கிலீஷ் துரைத்தனத்திற்கு முக்கியாதாரம் பார்லிமெண்டு என்கிற மகாசபையார். அந்தக் கூட்டம் வமிசக் கிரமமாய் வருகிற

470 பிரபுக்களும், அந்தந்த மாகாணத்து ஜனங்களால் நியமிக்கப்பட்ட 658 ஜனப்பிரதிநிதிகளும் சேர்ந்து உண்டாகியது. இந்தச் சபையாருடைய சம்மதியில்லாமல் அரசர் ஒரு காரியமுஞ் செய்வதற்கு சுவாதீனமுடையவரல்லர்.

இந்தச் சபையார் கூட்டங்கூடிப் பேசுவதற்காகப் பார்லிமெண்டு சபாமண்டபம் என்று சிறந்த மாளிகையொன்று நிருமிக்கப்பட்டிருக்கின்றது. அவரவர்க்குள்ள பேசுந்திறத்தையும் சாதுரியத்தையுங் காட்டத் தக்கவிடம் அதுதான். ஒருவர் பேசுவது யாவருக்கும் நன்றாய்க் கேட்பதற்குப் பிரதித்தொனி முதலியவைகளால் யாதொரு தடையும் உண்டாகாதபடி, சிற்பசாஸ்திரத்தை அனுசரித்து அந்த மாளிகை வெகு திறமையாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ராஜா மந்திரி முதலியவர்களுக்கும், விநோதமாய்ப் பார்க்கவரும் தேசாந்தரத்துப் பிரபுக்களுக்கும், அங்கே உபநியஸிக்கிற விஷயங்களைக் குறித்துக்கொள்ளக் காத்திருக்கும் சமாசாரபத்திராதிபர் முதலானவர்களுக்கும், மற்றுமுள்ள கனவான்களுக்கும் தக்கபடி இடங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன.

அங்கே மேற்சபை கீழ்ச்சபையென இரண்டு பிரிவுண்டு. அவற்றுள் பிரபுக்கள் சேருவது மேற்சபை; அதற்குத்தான் அரசன் அரசிவிஜயஞ்செய்வது வழக்கம். ஜனப்பிரதிநிதிகள் கூடும் இடம் கீழ்ச்சபை என்னப்படும். அதில் நடத்தப்படும் பிரசங்கங்களும் ஆலோசனைகளுமே முக்கியமானவை. அதற்கென்று நூதனமாய்ச் சிலவருஷங்களுக்குமுன் சமைக்கப்பட்ட மண்டபமொன்று மிகவும் சிறந்திருக்கின்றமையால் அம்மண்டபத்தின் அழகை நேராய்ப் போய்ப் பார்க்கக்கூடாத இத்தேசத்தார் பலரும் ஒருவாறு கண்டு களிக்கும்படி அதன் உருவத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிறோம்.

மரியாதைகளைப்பற்றி.

நல்லொழுக்கம் மரியாதை இவைகளைப்பற்றி எழுதவேண்டியவை பலவுள: அவையாவும் எடுத்துக்காட்டுவதென்றால் இங்கிடமெங்கே? சென்ற சஞ்சிகையில் அவைகளைப்பற்றிச் சிறிது எழுதினோமே; இன்னும் சில சங்கதிகள் இச்சஞ்சிகையிற் சொல்லுகிறோம்.

நல்லொழுக்கமும் மரியாதையுமாய் நடப்பவர்கள், எந்தவகுப்பினராகட்டும், எந்த அந்தஸ்தில் இருப்பவராகட்டும், எத்தன்மைய

னாகட்டும் யாவரிடத்திலும் கண்ணியமும் கவுரவமும் வணக்க முமாய் நடப்பார்கள். தமக்குச் சமானமானவர்களிடத்திலும் மேலோர்களிடத்திலும் எவ்வளவு வணக்கமாய் நடப்பார்களோ, அப்படியே தாழ்ந்தவர்களிடத்திலும் வணக்கமாய் நடப்பார்கள். தம்மு நல்லொழுக்கத்தையும் மரியாதையையும் கண்டு அதற் குத் தக்கபடி எதிர்மரியாதை செய்கிறவர்களிடத்திலும் அதைக் கண்டு பெருமைபாராட்டுகிறவர்களிடத்திலு மாத்திரமே நாகரிக மாய் ஒழுகுவார்கள் என்பதில்லை. ஒவ்வொருவனிடத்திலும் கட வுளுடைய அம்சம் அடங்கியிருக்கிறதென்பதை நன்றாய் நினைத்து, யாவரிடத்திலும் மரியாதையாகவே நடப்பார்கள். இளவேனிற்கா லத்தில் வீசும் இளங்காற்றுபோல் அவர்களுடைய நல்லொழுக்கம் எங்கும் மனோகரமாய் வீசி எவர்க்கும் சந்தோஷமுண்டாக்கும். எளியவனாகட்டும் வலியவனாகட்டும், தனிகனாகட்டும் தரித்திர னாகட்டும், மேன்மக்களாகட்டும் கீழ்மக்களாகட்டும் எல்லார்க்கும் நல்லொழுக்கமுள்ள ஒருவனைப் பார்க்கும்போதே அவனிடத்தில் மிகுந்த விருப்பமும் ஆநந்தமும் உண்டாகின்றனவே, அதற்குக் காரணம் என்னவென்று எண்ணுகிறீர்கள்? அவன் யாரைக் கண்டா லும் மிக்கமரியாதையும் வணக்கமும் இன்சொல்லுந் தாழ்நடையு மாய் நடந்து, முகமலர்ந்து நயமாய்ப்பேசி, யாவர்க்கும் மேன்மே லும் வளப்பமுண்டாகவேண்டுமென்று வாழ்த்துவான். அதனால் அவனைக் காண்கிறவர்களும் இப்படிப்பட்ட நற்குண நற்செய்கை யுள்ளவன் எந்நாளும் ஒரு குறையுமின்றிச் சுகமாக இவ்வுல கில் வாழவேண்டுமென்று கடவுளை வணங்கி வேண்டிக்கொள்வது மன்றி, அவனுக்குச் சரியான அந்தஸ்தில் இருப்பவர்களும் தாழ்ந்த வர்களும் அவனுக்கு அடிமையாய் நடக்க விரும்புவார்கள்; உயர் ந்தவர்கள் அவனோடு தோழமைபாராட்டப் போவல்கொள்வார் கள். சாதாரணமாய் இத்தேசத்தில் மேல்வகுப்பினர் ஒருவரை ஒரு வர் காணும்போது கையெடுத்துக் கும்பிட்டாகிலும், சாஷ்டாங்க மாய் வந்தனம்பண்ணியாகிலும் மரியாதையாய் நடக்கிற வழக்கம் ஆதிகாலந்தொடங்கி வந்துகொண்டிருக்கக் காண்கிறோம். அதனாலே தான் அவர்கள் நாளைக்கும் சிறப்பும் பெருமையும் கண்ணியமு மாய் வாழ்ந்துவருகிறார்கள்; கீழோர்களிடத்தில் அந்த வழக்கம் கிடைக்கவே கிடையாது. அதனாலேதான் அவர்கள் வரவர இழிந்த தன்மையுந்துர்க்குணமும் உடையவர்களாய் இன்னது செய்யலாம்,

இன்னது சொல்லலாமென்பதுகூடத் தெரியாமல் மானம் வெட்கமெ ன்பது சிறிதுந்தோன்ருமல்; வாயில்வந்தபடி கேட்போர் அருவரு க்கும்படியான இழியசொற்களைச் சொல்லித் தெருத்தெருவாய் இரைந்து கூவிக்கொண்டுபோகிருர்கள்.

இப்படி அநேகரிடத்தில் மரியாதை என்பது அடியோடு அழிந் துபோய் இருக்கிறதென்பதுமாத்திரமேயல்ல; அநேகரிடத்தில் மரி யாதை மிதம்மிஞ்சியுமிருக்கக் காண்கிருேம். ஒருவனுக்குக் கெடுதி விளைப்பதில் மரியாதையில்லாமை எப்படியோ, அப்படித்தான் மிதம்மிஞ்சின மரியாதையும். அதிகமாக மரியாதையைக் காட்ட வேண்டுமென்று எண்ணங்கொண்டு எதிராளிக்கு வெறுப்பும் மனத் துயரமுமுண்டாகும்படி அநேகர் நடக்கிருர்கள். நல்லொழுக்க முடையவர்களோ அப்படியல்ல; அவர்கள் தங்கருத்தைவிடப் பிறர்கருத்தையே பெரிதாய்ப் பார்த்து அதற்கியைந்தபடி நடப் பார்கள். தம் உற்ருரோ உறவினரோ யாராவதொருவர் குடி, கள் ளம், சூது, பொய், புரட்டுமுதலியவற்றுள் ஏதாவதொரு தீயசெயற் செய்தால் அதைக்கண்டு கடுமையாய்க் கோபித்து அந்தக் குற்ற த்தை எப்படியாவது நிரூபிக்கவேண்டுமென்று அவசரமாய்த் துடித் துப் பேசமாட்டார்கள். அப்படிக் குற்றஞ்செய்தவர்களை எதி ரில் நிறுத்திக்கொண்டு அவர்கள் குற்றங்களை எடுத்தெடுத்து உறுத் திச்சொல்லி அவர் மனம் புண்படும்படியாகவும் செய்யார்கள். புதிதாய்வந்த விருந்தாளிகளுக்கு நாம் அதிகமாக மரியாதைசெய்ய வேண்டுவது அவசியமாயினும், அதை அவர்கள் வேண்டாமென்று மறுப்பார்களாயின், அதன்மேல் நாம் உறுத்துவது தகுதியன்று; அவர்கள் செலவுபெற்றுக்கொண்டு வெளியேபோக விருப்பங் கொள்ளும்போது அவர்களைப் போகவொட்டாமல் கதவைப் பூட் டிடுவதும், குடை பாதரக்ஷை முதலியவைகளை எடுத்தொளித்து விடுவதும் ஆகிய இவையெல்லாம் கெட்டநடத்தையாகுமே ஒழிய ஒருபோதும் நன்னடக்கையாகா. அப்படிச் செய்வதெல்லாம் தெரியாமையால் உண்டாவனவாகையால் அவை குற்றங்களுள் முதன்மையானவையென்றே கொள்ளவேண்டும். ஆயினும் அப்படி நடப்பது அருமையாகையால் அதைப்பற்றி இங்கே விசேஷ மாய்ப் பேசுவதில் பயனில்லை.

நல்லொழுக்கமும் மரியாதையும் ஒன்றுதானென்று அநேகர் எண்ணிக்கொண்டிருக்கலாம். நல்லொழுக்கத்திற்கும் மரியாதைக்

கும் சம்பந்தமேயில்லை. நல்லொழுக்கம் வேறு; மரியாதைவேறு. மரியாதைக்காகச் சுதந்தரமாய் ஏற்பட்டிருக்கிற விதிகள் அநேகவிடங்களில் மிகவும் கேடுகெட்டுக்கிடக்கின்றன. ஓரிடத்திலிருப்பது போல் மற்றோரிடத்திலில்லை; ஒருகாலத்திலிருப்பதுபோல் மற்றொருகாலத்திலில்லை. நல்லொழுக்கமோ அப்படிப்பட்டதன்று; நன்றாய்க் கற்றறிந்த பெரியோர்களால் விவேகத்தையே முதன்மையாகக்கொண்டு உ[illegible]நீதிக்கியைந்தபடி ஏற்படுத்தப்பட்டது. எக்காலத்திலும் எவ்விடத்திலும் அது ஒரேமாதரியானது. நல்லொழுக்கத்திற்கும் மரியாதைக்குமுள்ள பேதத்திற்கு வேண்டிய திருஷ்டாந்தம் நமது தேசத்தாரிடத்திலேயே அநேகம் கிடைக்குமாயினும், அப்படி வெளிப்படையாய் எடுத்துக்காட்டுவது நம்மவருள் சிலர்க்கு மிகவும் கோபமுண்டாக்குமென்று கருதி ஜபான்தேசத்தில் நடக்கும் மரியாதையின் கொடுமையை எடுத்துக்காட்டுகிறோம்.

அமைதியாய் வாழ்கின்ற வகுப்பினர்கூட மரியாதையென்று சொல்லிக் கெட்டநடத்தை நடக்கிறார்களென்று அவ்விடத்திற்கு ஸ்தானாதிபதியாய்ப் போய்வந்தவர் ஒருவர் கண்டறிந்து எழுதியிருக்கிறார். புதிதாய்வந்த மரியாதைமனிதன் ஒருவனை யாராவது மற்றொருவன் கொஞ்சம் அவமானப்படுத்தினால் அப்படி அவமானப்படுத்தப்பட்டவன், தன்னை அவமானப்படுத்தினவனைத் தன் கண்களாலேயே கொளுத்திப்போடுகிறவன்போல் சுடச்சுடப் பார்த்துக்கொண்டு, வாயைத்திறவாமலே தன் வயிற்றைத்தானே கிழித்துக்கொள்ளுவானாம். அவன் அப்படிச் செய்துகொண்டால் உடனே அவமானப்படுத்தினவனும், மரியாதையென்று சொல்லி அவ்விடத்தவர் ஏற்படுத்தியிருக்கும் கொடிய விதிக்கு உட்பட்டு, முன்னவன் செய்ததுபோலவே தன் உடலைக் கிழித்துக்கொண்டு உயிர் மாய்க்கவேண்டுமாம். அவ்விடத்தான் ஒருவனுக்கு யாராவது மற்றொரு தேசத்தான் கொஞ்சம் மானக்கேடான காரியஞ்செய்து விட்டால் அப்பொழுது அவன் பார்க்கிற பார்வை இப்படிப்பட்டதென்று ஒருவராலும் சொல்லக்கூடாதபடி, அவ்வளவு கொடியதாயிருக்குமாம். முன் அமெரிக்கா தேசத்தானொருவன் ஜபான்தேசத்தானுக்கு மானக்கேடாய் ஏதோ ஒரு காரியஞ்செய்ய, அப்போது ஜபான்தேசத்தான் தன்னை அவமானஞ்செய்தவனைப் பார்த்த பார்வை யவ்வளவு இதுவரையில் கண்டதுமில்லை, இனி காணப்போகிறதுமில்லை என்று சொல்லுகிறார்கள். அவன் தங்கள் தேசத்துச் சட்ட

ப்படியே, தான் செய்வதுபோலவே அமெரிக்காதேசத்தானும் செய்வானென்று எண்ணி உடனே உடலைக் கிழித்துக்கொண்டு அவஸ்தைப்பட்டு மாண்டுபோனான். இந்தக் கேடுகெட்ட வழக்கத்திற்கு அமெரிக்காதேசத்தான் ஏன் உட்படுவான்? அவன் தன் உடம்பை ஒன்றுஞ்செய்துகொள்ளவில்லை. இப்படிக்கூட ஒரு செய்கை உலகிலுண்டோவென்று, ஜபான்தேசத்தான் நடந்த நடத்தையைப் பார்த்துப், பிரமித்து மலர்ந்தகண் மூடாமலே திகைத்துநின்றான். அப்படி ஜபான்தேசத்தான் செய்ததுகூடத் தன் உடம்பில் ஒரு காயம்பட்டதென்பதற்காகவன்று. இந்த அற்பப்பையலா நமக்கொரு கெடுதி விளைக்கிறது என்பதற்காகவே செய்தது. தனக்குத்தானே தீங்கு விளைவித்துக்கொள்கிற இத்தன்மையான கேடுகெட்ட வழக்கத்தால் துக்கத்துக்கேதுவான இப்படிப்பட்ட தீய பயன்கள் உண்டாகாமலிருந்தால், அதைக்கண்டு நாமெல்லாம் சிரித்துப் பரிஹாசஞ் செய்யலாம்; இப்படி அநர்த்தமாய் உயிரை மாய்த்துக்கொள்வதென்றால் அதைக்கண்டு துக்கப்படாது நாம் மற்றென்னசெய்யலாம். நல்லமாதிரி நல்ல நடவடிக்கை என்று சொல்லிக் கேடுகெட்ட வழக்கங்கள் நமது தேசத்திலும் சில உண்டு. ஆயினும் இப்படிப்பட்ட விபரீதநடத்தை எங்குமிருக்கக் காணோம். மரியாதையென்று பிரசித்தமாய்ப் பேர்பெற்ற இப்படிப்பட்ட செய்கைகளெல்லாம் என்றைக்காவது நன்னடைக்கையாகுமா? நன்னடைக்கை என்கிற பேரைச்சொன்னாலே இவையெல்லாம் பதின்காதவழி பறந்தோடவேண்டுமே.

இப்படி மரியாதைக்கும் நல்லொழுக்கத்திற்கும் வேற்றுமை விசேஷமாய் உண்டாகையால், நல்லொழுக்கத்தின் பெருமையையும் சிறப்பையும் இத்தன்மையான பொல்லாங்குகள் ஒருபோதும் அசைக்கமாட்டா. நல்லொழுக்கமென்கிற தைலமொன்றிராவிட்டால் பலபேர் ஒன்றிவாழ்தலென்கிற சக்கரம் எப்படிச் சுழன்றுகொண்டிருக்கமாட்டும்? யதார்த்தவாதியாயிருப்பதுகூடக் கொஞ்சம் கண்டிப்போடு கலக்குமானால் பிறர்க்கு ஆயாசத்தையுண்டாக்கும். நன்னடக்கையோ அப்படிப்பட்டதன்று: அது அதிக முரட்டுத்தனமுமில்லாமல் அதிக நன்மையுமில்லாமல், அவரவர்க்குத் தக்கபடி நடக்கச்செய்து நல்லவனென்று பேருண்டாக்கி எவரையும் தன் அதீனமாக்கிக்கொள்ளும்படி செய்யுமானால், அதன் பெருமை எப்படிப்பட்டதாயிருக்குமோ பாருங்கள்!

பொருள் விவேகம் அந்தஸ்து இவையெல்லாம் சிலவற்றைமாத்திரமே சுவாதீனப்படுத்தமாட்டும். அன்பு இரக்கம் அனுதாபம் என்னும் இவைகளுக்குச் சுவாதீனமாகாத பொருள் உலகத்தில் ஒன்றுமில்லை. மனிதர் தமது யுக்தி விவேகசாமர்த்தியங்களால் நன்னடத்தையில் எவ்வளவு தேர்ச்சிபெறுவார்களோ அவ்வளவு, அன்பும் ஆதாரமும் வணக்கமுமாய் நடப்பதனாலும் பெறமாட்டுவார்கள். உலகத்தில் இன்னவிஷயத்தில் இன்னான் தேர்ந்தவனென்று ஒருவனுக்குப் பிரசித்தி வருவதெல்லாம் அவனவனுடைய நல்லொழுக்கத்தினாலேயொழிய வேறல்ல. ஒருபெரிய சபையில் பிரசங்கஞ்செய்யத்துணிந்த ஒருவன் அந்தச் சபையோர் அனைவர்க்கும் தன்னிடத்தில் விசுவாஸமுண்டாகச்செய்து, அவர்கள் தான் சொல்வதை ஆவலோடு கேட்கும்படி செய்துகொள்ளுகிறான்; அது அவனுடைய நல்லொழுக்கத்தினாலேயன்றி வேறென்ன? சிறந்த வைத்தியனொருவன் தான் பிணியாளியண்டை போம்போதே அவனுக்குத் தன்னிடத்தில் நன்றாய் நம்பிக்கையுண்டாக்கிக்கொண்டு, தான் கொடுக்கும் மருந்துகளை அவன் ஆவலோடு வாங்கிப் புசிக்கும்படி செய்துகொள்கிறான்; அது அவனுடைய நல்லொழுக்கத்தினாலேயன்றி வேறென்ன? நியாயத்தை நன்றாய் ஆய்ந்து சொல்லும்படி ஏற்படுத்தப்பட்ட ஜூரியென்கிற மத்தியஸ்தர்கள் பக்ஷபாதமும் பிடிவாதமுமின்றி நியாயத்தையே கண்ணாய்க் கொண்டவர்களல்லவென்று தெரிந்தாலும், அவர்களை ஒவ்வொருவராய்த் தன் வழிக்குத் திருப்பிக்கொள்ளலாமென்று எண்ணி, நியாயாதிகாரி அவர்களிடத்தில் எம்மாதிரி நடக்கவேண்டுமோ அம்மாதிரியாகவே நடப்பான். ஒரு வர்த்தகனுக்கு விசேஷலாபத்தை விளைப்பது அவனுடைய இனியமொழியும் வணங்கிய நடையுமேயொழிய வேறென்ன? இப்படி ஒரு மனிதனுக்கு எந்தவிடத்திலாகட்டும் எந்தக்காலத்திலாகட்டும் எந்தக்காரியத்திலாகட்டும் பேரும் பெருமையும் பிரசித்தியும் உண்டாக்குவது அவனுடைய நன்னடக்கையொன்றுதான். ஒருவன் எவ்வளவு குரூபியாயிருந்தாலும் நன்னடக்கை ஒன்றிருக்குமானால் அவன்மேல் எவரும் ஆசைகொள்வார்கள். நன்றாய்த் தீர ஆலோசித்துப்பார்க்குமளவில் "பெருமையுஞ் சிறுமையுந் தான்தரவருமே" என்கிறபடி, ஒருவனுக்குப் பெருமையுண்டாவதும் சிறுமையுண்டாவதும் அவனவனுடைய மனப்போக்கினாலேயேயொழிய வேறொன்றினாலுமல்ல. ஆகலால் எவரும் கடவுள்

தமக்குக் கைகால்முதலிய உறுப்புகளைக் கொடுத்திருப்பது ஒடுக்கமும் வணக்கமுமாய் நடந்து நல்லசெய்கைகளைச் செய்வதற்காகவென்றும், கண் மூக்குச் செவி முதலிய இந்திரியங்களை அளித்திருப்பது எதையுங் குளிர்ந்து கண்ணாரப்பார்த்தும் நல்ல வாசனைகளைமோந்தும் நல்ல குணங்களைக் கேட்டும் ஆநந்திப்பதற்காகவென்றும், மனதை அளித்திருப்பது ஒருவர்க்குங் கெடுதி நினையாமல் யாவரிடத்திலும் பக்ஷமாய் நடந்து எவருக்கும் க்ஷேமத்தைக் கோருவதற்காகவென்றும் நினைத்து அதற்குத் தக்கபடி நல்லவழியில் நடப்பார்களானால் அவர்களுக்கு எந்நாளும் எக்குறையும் நேராது; கடவுளுடைய கருணாகடாக்ஷமும் அவர்கள்மேலேயே நோக்கமாயிருக்கும்.

தக்காணத்துப் பூர்வகதை.

ஒரு வீரவண்ணான்.

முன்னொருகாலத்தில் ஒருநாள் ராத்திரி இடியும், மின்னலும், காற்றும், குளிரும் சேர்ந்து அதிக பயங்கரமாய்க் காற்றுமழை அடிக்கவே, ஒரு வேங்கை எங்குந்தங்க இடமில்லாமல், ஒரு ஏழைக் கிழவிவீட்டுத் தெருச்சுவரண்டைவந்து ஒதுங்கிநின்றது. அந்த வீடு புராதன கூரைக்குடிசையாகையால், நெடுநாளாய் வெயிலிலும் காற்றிலும் மழையிலும் அடிபட்டு மேல்புறமெல்லாம் செத்து, அப்போதிய மழையும் காற்றும் தாளமாட்டாமல் நொறுங்கித் தலைமேல் விழும்போலிருந்ததுமன்றியில், சாண்இடங்கூடப் பாக்கியில்லாமல் சொட்டுச் சொட்டென்று ஒழுக்கு தரையெங்கும் சொட்டிக்கொண்டிருந்தது. அதனால் அவ்வீட்டுக்காரி தான் நனைவதுமல்லாமல் வீட்டுப் பண்டங்களெல்லாம் நனைந்து பாழாய்ப்போகிறதேயென்று அவைகளை இடம்விட்டு இடம் மாற்றி மாற்றி வைத்துக்கொண்டிருந்தாள். அவள் எந்த மூலைக்குப்போனாலும் அங்கே ஒழுக்காயிருந்தது. அதனால் அவள் ஒன்றுந் தோன்றாமல், ஐயோ! இதென்ன பிராணசங்கடமாயிருக்கிறது! இன்னும் நிமிஷத்துக்கெல்லாம் வீடுமுழுதும் தலைமேல் விழும்போலிருக்கிறதே! இந்த ஒழுக்கைப்பார்த்தால் எனக்கு வெகு பயங்கரமாயிருக்கிறது. யானை சிங்கம் புலிமுதலியவை வந்தாற்கூட நான் இவ்வளவு திகிற்படமாட்டேனென்று இப்படிப் பலதரம்சொல்லி முறையிட்டுக்கொண்டு கட்டில் பலகை பெட்டி முதலியவைகளை ஒழுக்கில்லாத இடத்தில் கொண்டுபோட எத்தனித்தாள். சுவர் ஓரத்தில்

நின்று இவையெல்லாம் கேட்டிருந்த புலி: இதென்ன! யானை சிங்கம் புலி இவைகளைவிட ஒழுக்கு அதிக பயங்கரமாயிருக்கிறதென்று சொல்லி இந்தப் பெண்பிள்ளை கதறுகிறாள்! அந்த ஒழுக்கு எப்படிப்பட்டதோ! அது மிகவும் கொடியதாயிருக்கும் போலே தோன்றுகிறது என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவள் சாமான்களைக் கடகடவென்று ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இழுத்த சத்தத்தைக்கேட்டு, அப்பா! இதென்ன! இந்தச் சத்தம் இடிமுழக்கத்தைவிட அதிக பயங்கரமாயிருக்கிறதே! இதுதான் ஒழுக்கின் சத்தமோ என்று இப்படி தனக்குள்ளே எண்ணமிட்டு நடுங்கிக்கொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் அவ்வூர் வண்ணானொருவன் தன் கழுதையைக் காணாமல் தேடிக்கொண்டு அவ்வழியே வந்தான். அன்றையதினம் அவன் குளிர்தாளமாட்டாமல் அதிகமாய்க் குடித்து வெறித்து மதிமயங்கியிருந்ததினால், ஒரு மின்னலொளியில் இந்தப் புலி தோன்றினதைக் கண்டு, அதுதான் தன் கழுதையென்று நினைத்து அதனண்டைபோய் ஒரு கையால் அதன் ஒருகாதைப் பிடித்துக்கொண்டு, மற்றொருகையால் தன் பலத்தையெல்லாங்கொண்டு அதை அடித்து இடித்துக் குத்தி வாயில் வந்தபடி, அடா! நன்றிகெட்ட நாயே! நீ எனக்கு ஆட்பட்டு என்னண்டை வேலைசெய்வது இப்படித்தானோ? இந்தப் பெருமழையிலும் பெருங்காற்றிலும் எதிரோ யாராவதுவந்து முன்னுச்சிமயிரைப் பிடித்திழுத்தாலுந் தெரியாத காரிருளிலும் உன்னைத் தேடும்படி என்னைத் தெருத்தெருவாய் அலைக்கழிக்கிறையா? வா வெளியே! இல்லாவிட்டால் உன் முதுகெலும்பெல்லாம் முறித்துப்போடுவேன் என்று கோபத்தாலும் வெறியாலும் தாறுமாறாய் வதறி அந்தப் புலியை அடித்ததட்டி வெளியே இழுத்தான். அதைக்கண்டு அந்தப் புலி இன்னது செய்கிறதென்று தெரியாமல் நடுநடுங்கி: அப்பா! இதுதான் அந்தப் பெண்பிள்ளைசொன்ன ஒழுக்குபோலத் தோன்றுகிறது! யானை சிங்கம் புலி இவைகளைவிட இது அதிக பயங்கரமாயிருக்கிறதென்று சொல்லி அவள் திகிற்பட்டது என்ன அதிசயம்! இது புடைக்கிற புடையலே நாம்கூடத் தாளமாட்டவில்லையே! என்று எண்ணமிட்டுக்கொண்டேபோயிற்று. வண்ணானும் அதைப் பிடித்திழுத்து அதின்மேல் ஏறிக்கொண்டு கையோயாமல் அடித்தோட்டி வீடுகொண்டுசேர்த்து அண்ணாந்தாள்போட்டுக் கட்டிவிட்டுப் படுக்கப்போயினான்.

மறுநாள் விடியனேரத்தில் வண்ணாத்தி வழக்கப்படியே எழுந்து வருகையில், தங்கள் கழுதை கட்டுகிறவிடத்தில் ஒரு பெரும்புலி கட்டியிருக்கக்கண்டு, இதென்னவென்று அதிசயித்துச் சரேலென்று ஓடித் தன் புருஷனை எழுப்பி: ராத்திரி நீ என்ன பிடித்துவந்து கட்டினாய் என்று கேட்க, அவன்: நமது கேடுகெட்ட கழுதையைத்

தான் தொண்டுவந்து கட்டினேனென்று சொன்னான். அதன்மேல் அவள்: ஆனால் வா பார்ப்போம் என்றுசொல்லி அவனை அழைத்துக்கொண்டுவந்து புலியிருப்பதைக் காட்டினாள். அதைப் பார்த்த போது அவனுக்கு உண்டான ஆச்சரியம் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்ல ஒருவராலுமாகாது. அதைக்கண்டு அந்த வண்ணான் இதென்ன புதுமையென்று எங்குமில்லாத ஆச்சரியமடைந்ததோடுகூட உடம்பில் எங்கேயாவது புலி தீண்டியிருக்குமோ என்னவோவென்று திகிலுமடைந்து தன் உடல்முழுதும் ஆராய்ந்துபார்த்தான். தெய்வாதீனமாய் ஒன்றுமில்லாமலிருந்தது. அந்தப் புலியும் அவன் ராத்திரி கட்டிவைத்தபடி நின்றவிடத்தைவிட்டு நகராமலே நின்றுகொண்டிருந்தது.

விடிந்த கொஞ்சநேரத்துக்கெல்லாம் அந்த வண்ணான் மகா வீரச்செய்கை செய்தானென்று ஒருசெய்தி அவ்வூர்முழுதும் பரந்தது. அதைக்கேட்டு அந்த அதிசயத்தைப்பார்க்க யாவரும் ஆவல்கொண்டு ஓடிவந்து: இந்தப் பெரும்புலியை நீ எப்படி பிடித்தாய்? எப்படி கட்டினாய்? உன் கையில் இது எப்படி அகப்பட்டது என்று ஒவ்வொருவரும் கேட்கத் தலைப்பட்டார்கள். அன்றையதினமெல்லாம் வந்தவர்களுக்கு விடைகொடுத்தனுப்புவதே அவனுக்குப் பெரிய வேலையாயிருந்தது. கடைசியில் அவன் மகா பராக்கிரமசாலியென்று எவரும் வியந்து, ஒரு ஆயுதமுமில்லாமல் ஒரு வேங்கையைப் பிடித்துக் கட்டும்படியான வீரத்தனமுள்ளவன் ஒருவன் உன் ராஜ்யத்தில் இருக்கிறானென்று சொல்லி அரசனுக்குங் கடிதமெழுதியனுப்பினார்கள்.

அந்தக் கடிதத்தைக் கண்டவுடனே அரசனும் ஆச்சரியப்பட்டு, அந்த அற்புதத்தைத் தான் நேராகவே போய்ப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டு, நாற்படைகளும் மற்றுமுள்ள மந்திரி பிரதானி முதலிய பரிவாரங்களும் புடைசூழப் புறப்பட்டுவந்தான். வண்ணான் கையிலகப்பட்ட புலி மிகவும் பெருத்துக் கொழுத்திருந்தது. அது வெகுகாலமாய் ஒருவர்கையிலும் அகப்படாமல் சுற்றுப்புறமெங்கும் பயமுறுத்திக்கொண்டிருந்ததாகையால், அப்படிப்பட்ட புலியைப் பிடித்தானென்று அந்த வண்ணானுடைய பெருமை இன்னும் அதிகமாய் ஓங்கிற்று. இந்தச் செய்தியெல்லாங்கேட்டு ராஜா, அவன் மகா சூரனென்று நினைத்து அவனை அதிகமாக மேன்மைப்படுத்தி, அவனுக்கு விசேஷமாய்க் காணிகளும் பூமிகளும் வீடுகளும் அளவற்ற ஐசுவரியமும் கொடுத்து அவனை அநேகம் சேனைகளுக்குத் தலைவனாக்கித் தன் ஆஸ்தானத்திலுள்ள கனவான்களுள் ஒருவனாக வைத்துக்கொண்டான்.

இப்படிச் சிலகாலங்கழிகையில், இந்த அரசனோடு நெடுநாளாய்க் கலகஞ்செய்துகொண்டிருந்த அண்டைநாட்டு அரசன் ஒருவன், தான் இப்போது வெளிப்படையாய்ச் சண்டைசெய்யத்

தீர்மானித்திருப்பதாகச் செய்திசொல்லி அனுப்பினான். அப்படி மடிமாங்காய்போட்டுப் போர்க்கழைத்த அரசன் அளவற்ற படைகளோடு தன் நாட்டை நெருங்கிவந்தானென்கிற செய்தியும் அதன்பின்னேயே வந்துவிட்டது.

திடீரென்று நேர்ந்த அந்தச் சங்கடத்தைக் கேட்டு ராஜசபையில் ஒருவர்க்குங் கைகாலாடாமற்போயிற்று. அரசன் தன் மந்திரி பிரதானி முதலியவர்களையும் சேனைத்தலைவர்களையும் வரவழைத்து, இப்போது நமது நாட்டில் படையெடுத்திருக்கிற பகைவனை வெல்லத் தலைவனாய்ச் சேனையை நடத்திக்கொண்டுபோகத் தைரியமுடையவர் யாரென்று வினவ, அவர்கள்: இப்போது நன்றாய்ப் போர்க்குப் பழக்கிய படைகள் பூர்த்தியாய்க் கைவசத்திலில்லையாகையால், முக்கிய சேனாதிபதிப் பட்டத்தை வஹித்து நம்பிக்கையாய்ப் பகைவனை எதிர்த்துச்செல்ல ஒருவர்க்குந் துணிவு உண்டாகவில்லையென்று சொன்னார்கள். அதைக்கேட்டு ராஜா இனி யாது செய்கிறதென்று தெரியாமல் தவித்திருக்கையில், சிலர்: நீங்கள் ஏன் இப்போது இவ்வாறு தவிக்கிறீர்கள்? முன் ஒரு வீரவண்ணானை அநேகந் தளங்களுக்குத் தலைவனாயிருக்கும்படி நியமித்திருக்கிறீர்களல்லவோ? இப்போது அவனை முக்கிய சேனாதிபதியாக்கி அனுப்பத் தடையென்ன? ஒருவர்க்கும் வசப்படாத பெரும்புலியைப் பிடித்துப் பூனைபோலடக்கினவனுக்கு இந்தப் பகைவனை வெல்வது ஒரு பெருங்காரியமா என்று சொல்ல, ராஜனும் சரிதானென்று ஆலோசித்து, அந்தக்ஷணமே அவனை வரவழைத்து: இப்போது இந்த ராஜ்யமெல்லாம் உன் கைமேலேதான் நிற்கின்றது; நீ போய் இப்போது நம்மை எதிர்த்துவருகிற பகைவன் படையைப் புடைத்துத் துரத்தினாலல்லது இந்த ராஜ்யம் நமக்குத் தக்காது. இச்சமயத்தில் எனக்குத்தக்க துணை உன்னைவிட வேறொருவருமில்லையென்றான். அதற்கு அவன்: கட்டளைக்குக் கீழ்ப்படியாமலிருப்பேனா? ஆனால் ஒன்று வேண்டுகிறேன்; நம் படைகளையெல்லாம் நடத்திக்கொண்டுபோவதற்குமுன் நான்மாத்திரம் தனித்து ஒருதரம் போய்ப்பார்த்து எதிரி சேனைத்தொகையையும் கூடுமானால் வலிமையையும் அறிந்துகொண்டுவரச் செலவுகொடுக்கவேண்டுமென்றான்.

அரசன் அதற்குச் சம்மதிக்கவே, வண்ணான் திரும்பி வீட்டுக்குவந்து மனையாளைப்பார்த்து: இப்போது நான் சேனைத்தலைவனாய்ப் பகைவனை வெல்லப்போம்படி அரமனையில் உத்தரவாயிருக்கிறது. இதுவரையில் அந்தக் காரியம் நான் ஒருபோதும் செய்ததில்லை. ஆகையால் அது எனக்கு வெகு கடினமாகத் தோன்றுகின்றது. ஆயினும் அரசன் ஆணையைக் கடந்தால் தலைபோகுமென்று அதற்குச் சம்மதித்துவந்தேன். குதிரைமேல் ஏறிக் குதிரைப்படைகளுக்குத் தலைவனாய்ச் சென்று அதைப் போர்க்கு

நடத்தவேண்டும்; நான் ஒருநாளும் குதிரைமேலேறினவனன்றே; ஆயினும் முன்னதாய் நான்மாத்திரம் ஒருதரம்போய் வேவுபார்த்து வருகிறேன் என்று இரண்டொரு நாளைக்குச் செலவுகேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். நாளைக் காலையில் நான் பயணப்படவேண்டும் நான் சுலபமாய்ப் போய்வரும்படி ஒரு குதிரைமட்டத்தைச் சித்தப்படுத்தவேண்டுமென்றான்.

அப்படியே மறுநாள் காலையில் அவன் பயணப்படச் சித்தமாயிருக்கையில், அரசன் சிறந்த குதிரையொன்று சீராய்ச் சிங்காரித்து அதன்மேல் ஏறிப்போம்படி அனுப்பினான். அந்தக் குதிரை நிமிஷங்கூடக் கால் தரையில் பாவாமல் படபடவென்று துடித்துக்கொண்டிருந்ததையும், அதன் கம்பீரத்தையும், கண்டு பயந்து வண்ணான் இதன்மேல் எப்படி ஏறிப்போகிறதென்று ஏங்கிப்போனான். ஆயினும் அரசன் கட்டளையை மறுக்கமாட்டாமல், தன் பெண்சாதியைப்பார்த்து: நான் இந்தப் பெருங்குதிரைமேல் எப்படி ஏறிப்போவேனென்று சொல்ல, அவள்: நீ பயப்படாதே; மெதுவாய் மாத்திரம் இதன்மேல் ஏறிக்கொள்வாயானால் பிறகு நான் கீழே விழவொட்டாமல் நன்றாய் இறுக்கிக் கட்டிப்போடுகிறேன்; நீ இராக்காலத்தில் புறப்படுவாயானால் உன்னைக் கட்டியிருப்பதை ஒருவரும் பார்க்கமாட்டார்களென்றாள். அவன் சரிதானென்று அதற்குச் சம்மதித்திருந்தான். அன்று ராத்திரி வண்ணாத்தி வண்ணானைப் பயணப்படுத்திக் குதிரையைக் கொண்டுநிறுத்தி ஏறச்சொல்ல, அவன் அதைப்பார்த்து: இவ்வளவு உயரம் நான் எப்படி ஏறுவேனென்றான். அதற்கு அவன் பெண்சாதி: எழும்பிக் குதித்து ஏறிக்கொள் என்று சொல்ல, அப்படியே இரண்டு மூன்றுதரம் எழும்பி எழும்பித் தாவினான். தாவியும் அதன்மேல் ஏறமாட்டாமல் கீழே கீழே விழுந்தான். மற்றொருதடவை ஏறும்போது: நான் எந்தமுகமாய்க் குதிரைமேல் உட்காரவேண்டுமோ அது மறந்துபோகிறதென்று சொல்ல, வண்ணாத்தி: குதிரையின் தலையைப்பார்த்துக்கொண்டு உட்காரவேண்டுமென்றாள். அப்படியே அந்தத்தடவை வேகமாய் எழும்பப் பின்முகமாய்க் குதிரைமேல் உட்காந்தான். அதுகண்டு வண்ணாத்தி மறுபடியும்: இப்படி அல்லவே; குதிரையின் தலையைப்பார்த்துக்கொண்டல்லவோ உட்காரவேண்டும் என்றுசொல்லி, குதிரைமேலிருந்து அவனைக் கீழிறக்கிவிட்டுத் திரும்பவும் ஏறச்சொன்னாள். வண்ணான்: இதோ ஏறுகிறேன்; இடதுகாலைத்தான் இந்த அங்கபடியில் வைக்கிறேன்; வலதுகாலை என்னசெய்கிறதோ, எங்கேவைக்கிறதோ தெரியவில்லை; அது அடிக்கடி மறந்துபோகிறதென்றுசொல்ல, அவள்: குதிரையைத் தாவி மற்றொருபுறத்து அங்கபடியில் வைத்துக்கொள்ள வேண்டும்; மெல்லத் தாவியேறு; நானும் ஒருகை பிடிக்கிறேனென்றாள். பின்பு பலதடவையேறி, பலதடவை கீழேவிழ்ந்து, பலதட

வை பின்புறமாய்த் திரும்பியேறி, இப்படி வெகுநாழிகை தடுமா றிக் கடைசியில் சரியாக ஏறி உட்காந்தான். உட்காந்ததும் வடவட வென்று உடல்நடுங்க ஒன்றுந்தோன்றாமல்; வண்ணான்: ஓகோ! என் அருமைமனையாட்டி! சீக்கிரம் என்னைக் கட்டு! கட்டு! கீழே விழுந்துபோனேன்; உடல் நடுங்குகிறதென்றான். உடனே அவள் உரத்த கயிறுகளைக் கொண்டுவந்து, அவன் கால்களை அங்கபடி யோடு சேர்த்து உறுதியாய்க் கட்டி, இரண்டு அங்கபடியையும் ஒன்றாய்ச் சேர்த்துக்கட்டி, அவன் அரையைக் குதிரைவயிற்றோ டும், கழுத்தை ஒருபக்கத்திலும் சாயாதபடி முன்புறமாய்க் குதி ரைக் கழுத்திலும் பின்புறமாய் வாலிலும் வலித்துக்கட்டினாள்.

தன் உடம்பில் ஊசிநாட்ட இடமில்லாமல் இறுக்கிக் கட்டிப் போடவே அந்தக் குதிரை, தன்மேலிருப்பது பூதமோ பிசாசமோ என்று திகிற்பட்டு, நின்றவிடத்தினில்லாமல் எழும்பிக் குதித்துத் துள்ளிக் கடைசியில் நாலுகால் பாய்ச்சலாய்க் கால் தரையில் ஊூவாமலே பறந்தோடத் தலைப்பட்டது. அதன்மேல் நின்ற வண் ணான் அதுகண்டு ஒன்றும் தோன்றாமல் கண்ணீர் மாலைமாலையாய்ப் பெருக, ஓ! மனையாட்டி! மனையாட்டி! நீ என் கைகளைக்கட்ட மறந் துபோனாயே; இப்போது நான் என்னசெய்கிறது என்று கூவிக் கதற, அவள்: பயமில்லை; பிடரிமயிரைப் பத்திரமாய்ப் பிடித்துக் கொண்டுபோவென்றாள். அப்படியே அவன் பிடரியைப் பிடித் துக்கொண்டான். வரவர வேகம் அதிகமாகி, மேடுகளும் பள் ளங்களும், குன்றுகளும் கணவாய்களும், ஆறுகளும் ஏரிகளும் பாலைவனங்களும் அலக்ஷியமாய்த் தாவிக்கொண்டு, இப்போது தென்படுகிற பொருள்கள் ஒருநிமிஷங்கழித்துத் தென்படாத படி வாயுவேகம் மனோவேகமாய் வழிதுறையில்லாமல் தன் மன திற்குத் தோன்றியபடி அக்குதிரை ஓடத்தலைப்பட்டது.

அதன்மேல் இறுகக்கட்டுண்டு உட்காந்திருக்கிற வண்ணான் அந்தச் சவாரியைத் தாளமாட்டாமல் தவிப்பதோடுகூட, அந்தக் குதிரை தன்னை எங்கே சத்துருக்கள் இருக்குமிடத்திற்குக் கொண் டுபோய் யுத்தபூமிக்குப் பலியாக்கிவிடுகிறதோ என்கிற திகிலினால், ஒன்றுந்தோன்றாமல் மிகவும் உடல்நடுங்கிக்கொண்டே போனான். அப்படிப் போய்க்கொண்டிருக்கையில் எப்படியாவது தப்பித்துக் கொள்ளவேண்டுமென்று துணிந்து அவன், வழியிலிருந்த ஒரு சிற் றாலமரக்கிளையைப் பிடித்துக்கொண்டான். குதிரையின் கட்டு விடு பட்டுப்போமென்று எண்ணி அவன் அம்மரக்கிளையைத் தாவ, கிண றுவெட்டப்போய்ப் பூதம் புறப்பட்ட கதையாய், அம்மரம் வேரோ டுபெயர்ந்து அவன் கையோடு வந்துவிட்டது. அவன் அதைக் கீழேபோடமாட்டாமல் அப்படியே போயினான். கடைசியாய்க் குதிரை அவனைப் பகைவன் படையிறங்கியிருக்குமிடத்தில் கொண் டுபோய்விட்டது.

சத்துரு சேனையிலிருந்த போர்வீரர்களெல்லாம் இவனை வெகு தூரத்திலேயேபார்த்து:ஓகோ! இவன்நம்மெதிரிப் படையாட்களுள் ஒருவன்போல் காண்கிறான். இவன் மரம் மரமாய்ப் பெயர்த்து எடுத்துக்கொண்டு ஓடிவருகிறானே! அந்தப் படையாட்களெல்லாம் இப்படியே இருப்பார்களானால் நாம் இப்போதே செத்தவர்கள்தாம் என்று எண்ணி அரசனண்டையோடி: ஓகோ குடிகெட்டது! இதோ சத்துரு சைனியமெல்லாம் வந்துவிட்டது; அவர்களுக்குக் காட்டுமரங்கள் ஆயுதமேயொழிய வேறொன்றுமின்று; ஒவ்வொரு வரும் இரண்டு கைகளிலும் இரண்டு மரங்களைப் பெயர்த்தெடுத் துக்கொண்டு குதிரைமேல் ஏறிவருகிறார்கள். நாங்கள் மனிதர்க ளோடு போராட வல்லவர்களே ஒழிய இப்படிப்பட்ட ராக்ஷதர்க ளோடு சண்டைசெய்ய வல்லவர்களல்லவென்றுசொல்லி முறை யிட்டார்கள். இதற்குள் இன்னும் அநேகர் ஓடி: இதோ வந்துவிட் டார்கள், நொடிப்பொழுதில் நாமெல்லாரும் ஓடிப்போனால்தான் உயிராவது தப்பும்; ஓடுங்கள்! ஓடுங்கள்! பகைவன்படை வந்து விட்டது! வந்துவிட்டது! என்று முறையிட்டுத் திக்குக்கொருவனாய் ஓடிப்போனார்கள். இந்த வண்ணானைக் கண்டு மனஞ்சலியாமலிருந் தவர்களுள் சிலர்: யாவரும் ஓடுகிறார்களே, நாமும் ஓடுவோமென்று ஓடினார்கள்; சிலர் நாம்மாத்திரம் இங்கே நின்றுவதென்னவென்று சொல்லி ஓடிப்போனார்கள். இப்படிச் சேனைகளெல்லாம் ஓடிப்போ கவே அந்த ராஜன் இன்னது செய்கிறதென்று தோன்றாமல், தான் எதிர்க்கத் துணிந்திருந்த அரசன்பேருக்குச் சமாதானவுடன்படிக் கை ஒன்று எழுதிக் கையெழுத்துசெய்து அந்தக் கூடாரத்திலேயே போட்டுவிட்டுத் தானும் ஓடிப்போயினான்.

அவர்கள் போனதும் போகாததுமாயிருக்கையில், வண்ணான் குதிரை வெகுதூரம் ஓடிவந்ததனால் ஓய்ந்து களைத்து அப்புறம் ஓ டச் சக்தியற்றதாய் அந்தச் சேனையிறங்கியிருந்த இடத்தில் வந்து நின்றது. குதிரை அவ்விடம்போய் நின்றதும் அதன்மேலிருந்த கட்டுகளெல்லாம் விடுபட்டுப்போயின. வண்ணான் சர்வசத்தும் ஒடுங்கி உயிர் தத்தளிக்க மூர்ச்சைபோய்த் தரையில் வீழ்ந்தான். கொஞ்சநேரம் கழிந்து நினைவுவந்து விழித்துப்பார்க்கையில் பல வகைப் படைகளோடுங் கண்ணுக்கெட்டினதூரம் அடர்ந்திருந்த சேனையெல்லாம் ஒரு காலாள்கூடத் தப்பாமல் ஓடிப்போயிருந்தன. அதைக்கண்டு ஆச்சரியமடைந்து வண்ணான் அவ்விடத்தைச் சுற் றிப்பார்த்தான். அங்கிருந்த சிறந்த கூடாரமொன்றில், "நாங்கள் தங்களோடு சமாதானமாய்ப்போக ஆவல்கொண்டு இதோ ஓடிப் போகிறோம்; எதிர்த்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்" என்று கண்டு தங்கள் அரசன்பேருக்கு விலாசமெழுதிக் கடிதமொன்று போட்டிருந்தது.

வண்ணான் அந்தக் கடிதத்தைக் கண்டு சந்தோஷமாய்த் திரும்

பித் தன் தேசத்திற்குப்போக எத்தனித்து மறுபடியும் குதிரையில் ஏறிப்போகப் பயந்து குதிரையை இழுத்துக்கொண்டு நடந்து நேர் வழியாய் வெகுசீக்கிரத்தில் வீடுவந்துசேர்ந்தான். இவ்வளவு சீக்கிரத்தில் தன் புருஷன் போய்வந்ததைக்கண்டு வண்ணாத்தி ஆனந்தத்தால் உடம்பு பூரித்து எதிர்கொண்டோடிவந்தாள். அவனைக் கண்டதும் வண்ணான்: ஆ! ஆ! நான் பட்டபாட்டை என்னவென்றுசொல்லுவேன். இவ்வுலகத்தில் ஓரிடங்கூடப் பாக்கியில்லாமல் இந்தக் குதிரை என்னைச் சுற்றுவித்தது. போனதுபோயிற்று; இனி அதைச் சொல்லியென்ன? உடனே இந்தக் கடிதத்தையும் எனக்காகவந்த இக்குதிரையையும் அரசனிடத்திற்கு அனுப்பிவிடு; குதிரையை இப்போதே அனுப்பிவிடாவிட்டால் நாளைக்காலையில் அரமனைக்குப் போம்போது இதன்மேலேயே ஏறிக்கொண்டுபோகவேண்டிவரும்; அதை நினைக்கும்போதே என் உடல் நடுங்கிப்போகின்றது, என்றுசொல்ல: அவள் அப்படியே கடிதத்தையும் குதிரையையும் ஒரு ஆள்கையில் கொடுத்து, இப்போது ராத்திரி நேரமாய்விட்டபடியால் நாளை உதயத்திற்குத் தன் புருஷன் அரமனைவந்து சேருவார் என்று அரசனுக்குச் செய்திசொல்லி அனுப்பினாள்.

மறுநாள் காலையில் வண்ணான் அரமனைக்குப்போகப் புறப்பட்டான். போம்போது ஜனங்கள் அவனைப்பார்த்து: இவ்வளவு பராக்கிரமம் உள்ளவன் எவ்வளவு வணக்கம் உடையவனாயிருக்கிறான்; இவ்வளவு துணிச்சலான செய்கை செய்துவந்து ஒன்றுமறியாதவன்போலக் காலால் நடந்துபோகிறானே; வேறு யாராயினுமானால் இப்படி நடப்பார்களா என்றுசொல்லி அதிசயித்தார்கள். அவன் குதிரைமேல் ஏறப்பயந்து காலால் நடந்துபோவது யாருக்குத்தெரியும்! அந்த வண்ணான் அரமனைவாயிலில் நுழைவதற்குமுன்னமே அரசன் எதிர்கொண்டுவந்து ஆஸ்தானத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் வேண்டிய மரியாதைகள்செய்து, நீ நமது சத்துருவைச் சயித்தவிதமென்ன? உன்னைக் கண்டு அவன் ஓடிப்போன விதமென்னவென்று பலதடவை கேட்டு மகிழ்ந்து, அவன் கொண்டுவந்த கடிதத்தில் கண்டபடியே சமாதான உடன்படிக்கையும் ஏற்படுத்தி, அவனுக்குப் பல பட்டப்பெயர்களும் அளவற்ற பொருள்களும் பரிசாகக் கொடுத்து, இவனைப்போல் தைரியமும் சவுரியமுமுடையவன் வேறொருவனும்இல்லையென்று எண்ணி அவனை ராஜகாரியத் துணைவனாகத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டான். வண்ணானும் ஒரு குறையுமில்லாமல் தன் ஆயுளளவும் சுகமாக வாழ்ந்திருந்தான்.

உணவுப்பொருள்கள்

மனிததேகத்தைப் போஷிப்பதற்கு அவசியமான பல பொருள்களில், நீரும் பலவகை உப்புகளுந்தவிர மற்றவையெல்லாம் முன் ஒருகால் பிராணிகளோடு இருந்த வஸ்துக்களிலேதாம் காணப்படுகின்றன. அவை ஜந்துவர்க்கமாயிருந்தாலும் இருக்கலாம்; விருக்ஷவர்க்கமாயிருந்தாலும் இருக்கலாம். அந்தப் பொருள்கள், வெண்கரு, ஜிலதின், பசை, நார், எண்ணெய், கொழுப்பு, சர்க்கரைமுதலியவையாம். நமது இயற்கையான உணவுப்பண்டங்கள், இப்பொருள்களை எவ்வாறு நமது தேகத்துட்செலுத்தி நம்மைப் போஷிக்கின்றனவோ அதைச் சற்று கண்டறிவோம்.

இளமைப்பருவத்தில் நமக்கு உணவாயிருப்பது பாலல்லவா? முக்கியமாய் இளமையில் தேகபோஷணத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் அததற்குத் தக்கவளவோடு பாலில் நிறைந்திருக்கின்றன. வெண்கரு தயிர்வடிவமாகவும், பலவகை உப்பு, எண்ணெய்ப்பொருள், கொழுப்பு முதலியவை ஏடுவடிவமாகவும், சர்க்கரை பால்வடிவமாகவும் அதில் அடங்கியிருக்கின்றன.

கோதுமையில் கஞ்சிப்பசை, கோதுமைப்பசை, சர்க்கரை, எண்ணெய், கொழுப்பு முதலியவைகள் இருக்கின்றன. கோதுமைப்பசை என்பது மாநாரும், ஒருவகை வெண்கருவுங் கலந்து வெண்மைநிறமாய் ஒட்டிக்கொள்ளத்தக்க ஒருவகைப்பசை. இது மிகவும் புஷ்டியுண்டாக்கத்தக்கது. கஞ்சிப்பசையென்பது கொதிகஞ்சியின் தன்மையுள்ள மெழுக்குபோன்ற ஒருவகைப்பொருள். இந்தப் பசைகளும் சர்க்கரைப்பொருளும் ஒவ்வொரு வேளைகளில் வெவ்வேறு பொருளாக மாறத்தக்க தன்மையுடையவைகள். கோதுமையில் போஷணத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் பலவகைப் பசையும் அதிகமாயிருப்பதால் அது எல்லாத் தானியங்களிலும் உயர்ந்ததாக மதிக்கப்படும். அரிசியிலும் உருளைக்கிழங்கு முதலிய கிழங்குவகைகளிலும் கஞ்சிப்பசையும் தண்ணீருமே அதிகமாயிருக்கின்றன. போஷணத்திற்கு வேண்டிய பொருள்கள் இவைகளில் விசேஷமாயில்லை. கோதுமையிலிருப்பதில் ஏழிலொருபங்குதான் இவைகளிலுண்டு. மாமிசவகைகளிலே போஷணத்திரவியங்கள் அதிகமாய் உண்டென்கிறார்கள். பழவகைகளில் தேகபுஷ்டியைத் தரத்தகுந்தவை அதிகமாயில்லை. உருசியும் உற்சாகமும் உண்டுபண்ணத்தக்க சர்க்கரை, நீர், புளி இவைதாம் விசேஷமாயுண்டு. இவையெல்லாம் ஜீரணத்தில் வேற்றுமையுண்டாக்கும்.

ஒவ்வொருவகை ஆகாரத்தைக்கொண்டே உயிர்கள் ஜீவிக்கும்படி, சரீரசம்ரக்ஷணைக்குவேண்டிய பொருள்கள் ஏறக்குறைய ஒவ்வொரு உணவுப்பொருளிலும் அடங்கியிருக்கின்றன. முன் ஒரு சஞ்சிகையில் சொல்லியிருக்கிறபடி அரிசி, உருளைக்கிழங்கு, கோதுமை, பால் இவைமுதலான உணவுகளில் ஒவ்வொன்றைக்கொண்டே ஜீவிக்கிறவர்களும் அநேகருண்டல்லவா? ஆயினும் நாம் ஒரேவகை உணவினுல் ஜீவிப்பது கூடாது. பசுவர்க்கங்கள் புல் ஒன்றையே உணவாகக்கொண்டு விருத்தியாகின்றனவென்றும், நன்றாய் வருந்தி உழைக்கத்தக்க குதிரை, ஒட்டகம், யானை முதலிய வலிவுள்ள மிருகங்கள் புற்களையும் தழைகளையுமே புஜித்து வளர்கின்றனவென்றும் நமக்குத் தெரியும். ஆயினும் இப்படிப்பட்ட மிருகங்களைப்போலாகாமல் மனிதர்கள் பல சிறந்த வியாபாரங்களை நடத்தவேண்டுமென்று கருதிப் பல சிறந்த அவயவங்களோடு மேன்மையாய்ப் படைக்கப்பட்டவர்களாதலால் பலவகை உணவுகளும் சேர்ந்தால்தான் இவர்களுடைய உறுப்புகள் மிகவும் சவுக்கியமாய்க் காப்பாற்றப்படும்.

தானியாதி போஜனம்.

இத்தேசத்தார்க்குத் தானியவகைகளும் கந்தமூலபலாதிகளுமே சாதாரணமான உணவாயிருப்பதால், அவற்றுள் முக்கியமாய்ச் சிலவற்றுளுள்ள குணதோஷங்களை ஒருவாறு காட்டுகிறோம்.

நமது ஆஹாரத்துள் சேர்ந்திருக்கவேண்டிய பல பொருள்களுள் நைட்ராஜன் என்று சொல்லப்பட்ட உப்புவாயு மிகவும் அவசியமானது. நமது சரீரமும் மனதும் வேலையொன்றுமில்லாமல் சும்மாவிருக்குமானுல், சுமார் 200 தானியமணி அல்லது சுமார் 1 ரூபாய் நிறையுள்ள உப்புவாயுவும், சாதாரணமான மனவுழைப்பும் சரீரவுழைப்புமிருக்குமானுல் 300 தானியமணி அல்லது $1\frac{1}{2}$ ரூபாய் நிறையுள்ள உப்புவாயுவும், அந்த உழைப்புகள் அதிகரித்திருக்குமானுல் 500 தானியமணி அல்லது $2\frac{1}{2}$ ரூபாய் நிறைக்குக் குறையாத உப்புவாயுவும், நமது சரீரத்தைச் சவுக்கியமான நிலையிலேயே வைத்துக்கொண்டிருப்பதற்காக, நாளும் நாம் உட்கொள்ளுகிற உணவுகளில் சேர்ந்திருக்கவேண்டுவது அவசியமென்று அனுபவத்தினுலும் பதார்த்தத்துவ பரிசோதனையினுலும் தத்துவசாஸ்திரிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

அரிசி நமது உணவுகளில் முக்கியமாகையால் அதன் குணத்தை முதலில் காட்டுகிறோம். அரிசியில் நூற்றுக்கு ஆறுபங்கு உப்புவாயு இருக்கின்றது. நமது தேஹபோஷணத்திற்கு எவ்வளவு உப்புவாயு தேவையோ அவ்வளவு அரிசியிலுண்டு; ஆயினும் அதிகமாய்ச் சூடு உண்டாக்கி வயிற்றில் பலவித மாறுபாட்டைச் செய்யத்தக்க பொருள் அதில் நிறைந்திருப்பதனுல் அதை மாத்திரம் தனித்து ஒரு சிறந்தவுணவாகக் கொள்ளக்கூடாது.

கோதுமையில் நூறுபங்குக்கு 8 அல்லது 10 பங்கு உப்புவாயு இருக்கின்றது. கோதுமை, அரிசியைவிட வெகு நன்றாய்த் தேகத்திற்கு வளப்பத்தைத் தரும். இத்துடன் நெய்யும் கலக்குமானால், நன்றாய் உழைக்கிற ஜனங்களுக்கு இதுவே சிறந்த உணவாகும்.

புஞ்சைதானியங்களும் அநேகமாய் உடம்பிற்கு உறுதிதரத்தக்க உணவுகள்தாம். சோளம், கம்பு, வரகு முதலியவைகளில் நூற்றுக்கு 9 பங்கு உப்புவாயு கலந்திருக்கிறது. உடம்புக்குப் புஷ்டிதருகிற விஷயத்தைப்பற்றிப்பார்த்தால், ஒருபங்கு புஞ்சைதானியம் ஒன்றரைப்பங்கு அரிசிக்குச் சமானமாயிருக்கின்றது; ஆயினும் அவை அரிசியைப்போல் அவ்வளவு சுருக்காய் ஜீரணமாகா. நன்றாய் உழைப்பவர்கள் அவைகளை உணவாகக்கொண்டால் நல்ல வலிவுள்ளவராவார்கள்.

முதிரைவர்க்கங்களில் உப்புவாயு வெகு அதிகம். ஆயினும் அவை ஜீரணமாவது வருத்தம். ஆதலால் அவைகளை நன்றாய்ச் சமைத்தாகிலும், துவையல்முதலிய வடிவமாக மாவாக்கியாகிலும் உப்பு முதலிய சம்பாரங்கள் சேர்த்தே புஜிக்கவேண்டும். தொவரை, உளுந்து, கொள்ளு, கடலை, மொச்சைக்கொட்டை, அவரைக்கொட்டை முதலியவைகளில் நூற்றுக்கு 20, 25 பங்கு உப்புவாயு உண்டு. மாவாக்கி நன்றாய்ச் சமைத்துச் சிறிதளவாகக் கொள்வோமானால் அவை நமது சோற்றுக்கு நல்ல மாற்றாகும்.

தயிரில் நூற்றிற்கு 25 பங்கு உப்புவாயு கலந்திருக்கின்றது. சரீரத்திற்குப் புஷ்டியுண்டாக்குகிற விஷயத்தில் தயிர் காய்தானியங்களுக்குச் சமானமானது. மோரும் நன்றாய்ப் புஷ்டியுண்டாக்கத்தக்க பொருள்தான். ஆகாரத்தோடு கலந்து உபயோகப்படுத்தினால் நன்றாய் வலிமையுண்டாக்கும். பாலிலும் மோரிலும் நூற்றுக்கு நான்குபங்கு உப்புவாய் உண்டு. இந்தத் திரவப்பொருள்களை நாம் அதிகமாய் உட்கொள்வோமாகையால், நமது தேஹத்துள் அதிகமாய் உப்புவாயு சேருகின்றது.

பலவிதமான கறிகாய் கீரை முதலியவைகளில் உப்புவாயு விசேஷமாயில்லை. ஆயினும் அவை நமது உணவுக்கு நல்ல ருசியைத் தருகின்றன. ரத்தத்திற்கு ஆதரவாய் ஒஷதிரசங்களை உண்டாக்குகின்றன. உணவுகளைச் செம்மையாய் ஜீரணமாக்குகின்றன. ஆதலால் அவைகளை நாம் உணவினின்றும் ஒருபோதும் ஒதுக்கக்கூடாது.

உருளைக்கிழங்கு சேப்பங்கிழங்கு இவைகளில், அரிசி முதலிய தானியவகைகளில் விசேஷமாய்க் காணப்படுகிற பசை அதிகமாயுண்டு; அந்தப் பசைதான் தேஹத்தில் சூட்டைத் தாங்குவதுபோல் காண்கிறது. இந்தப் பசைமாத்திரமேயல்லாமல், தேஹத்திற்குப் புஷ்டியுண்டாக்கத்தக்க பல பொருள்களும் ரத்தத்திற்கு அவசியமான பலவித உப்புகளும் இந்தக் கிழங்குகளிலுண்டு.

வள்ளிக்கிழங்கு அநேக விஷயங்களில் முன்சொன்ன கிழங்குகளோடு ஒத்ததுதான். ஆயினும் சாதாரணமான கிழங்குகளிலுள்ள பொருள்களிருப்பதோடுகூட சர்க்கரைப்பொருளொன்று விசேஷமாயுண்டு. நன்ருய்ச் சமைத்துச் சாப்பிடுவோமாஞல் நல்லதுதான்; ஆயினும் அதை மிதமாய் ஏற்றுக்கொள்வது உத்தமம்.

நன்ருய்ச் சமைத்து மிதமாய்ப் புசித்தால் கருணைக்கிழங்கும் சிறந்தகறியாகும். இதன் குணமும் ஏறக்குறைய உருளைக்கிழங்கின் குணத்தைப்போலவே. இத்தன்மையான கிழங்குவகைகளையெல்லாம் நன்ருய்ச் சமைத்து மிதமாய்ப் புசிக்கவேண்டுமென்பதுமன்றியில், நன்ருய் மையமென்று புஜிக்கவேண்டும்; இல்லாவிட்டால் அஜீரணப்பட்டு வயிற்றுநோய் முதலிய துர்க்குணங்கள் உண்டாகும்.'

வாழைக்காயும் அதிகமாய்ப் பசையுள்ளது. சரீரத்திற்குப் புஷ்டியுண்டாக்குகிற விஷயத்தில் அரிசிக்கு எந்தக்குணமோ அந்தக்குணந்தான் வாழைக்காய்க்கும். இதையும் மிதமாகத்தான் வியஞ்சனமாகக்கொள்ளவேண்டும். ஆயினும் இவ்வகையான பசைப்பொருள்கள் தேஹத்திற்கு விசேஷமாய் வலிமையுண்டாக்கத்தக்கனவல்ல. வாழைத்தண்டு வாழைப்பூ வாழைக்கிழங்கு இவைகளைக் கறியாகக்கொள்வதஞல், ரத்தத்திற்கு அவசியமானரசங் கொஞ்சமுண்டாகும். அவ்வளவேயொழிய பருப்புவகைகள் கிழங்குமுதலியவைகளைப்போல் விசேஷ புஷ்டியுண்டாகாது.

பூசணி வெள்ளரிமுதலியவைகளும் இத்தன்மையானவைதாம். அவை சிறந்த ஓஷதிரசத்தைத் தந்து ரத்தத்தைச் செம்மையான ஸ்திதியில் வைத்துக்கொண்டிருக்கும். இவையும் அதிகமாஞல் அஜீர்ணத்தைத் தரும்.

மிதமாய்க் கறிகளில் சேர்த்துத் தேங்காயை எக்காலத்திலும் உபயோகப்படுத்தலாம்.

மாங்காய் கிச்சிலிக்காய் எலுமிச்சங்காய் முதலியவைகளை ஊறுகாய் செய்தாவது வேறுவிதமாய்ப் பக்குவப்படுத்தியாவது புஜித்தால் ரத்தத்திற்கு வேண்டிய ஓஷதிரசமும் உண்டாகும்; வாயிலுள்ள அருசி முதலியவையுமெடுபடும்; புளியும் அப்படிப்பட்டதுதான்.

சர்க்கரையில் சரீரத்துக்குச் சத்துஉண்டாக்கத்தக்கது ஒன்றுமில்லை. இளமைப்பருவத்தில்அது தேகத்துக்குக் கொஞ்சம் புஷ்டியுண்டாக்கும். அது தேகத்தை மிகவும் பருக்கச்செய்யுமாதலால் அதை விசேஷமாய் உபயோகப்படுத்தக்கூடாது. தித்திப்பு பணியாரங்களில் விசேஷமாய் விருப்பங்கொண்டால் நீர் அதிகமாயிறங்கத்தலைப்படும். வயிற்று உப்பசமும் காணும்.

கடுகு மிளகு முளகாய் சீரகம் வெந்தியம் சுக்கு இஞ்சிமுதலிய சம்பாரங்களும், லவங்கம் லவங்கப்பட்டை வால்மிளகு ஏலக்காய் முதலிய வாசனைத் திரவியங்களும் மிதமாய் உபயோகிக்கப்படு

மானால், உணவு நன்றாய் ஜீரணமாகிப் பசிதீபனம் உண்டாகும்; மனதுக்கு உற்சாகமுமுண்டாகும். இந்தச் சம்பாரங்களை உபயோகிக்கவேண்டிய அளவு சிலர்க்கு நன்றாய்த் தெரியாமலிருப்பதால், அவர்களுக்கு அவசியமாய்ச்சொல்லவேண்டுவதொன்றுண்டு. இந்தச் சம்பாரங்களை அளவுக்குமிஞ்சி அதிகமாய் உபயோகித்தால், பசி அதிகமாகி வேண்டியஅளவுக்கு அதிகமாய் உணவு ஏற்றுக்கொள்ளும்படியாகிறது. அதிகமாய்ச் சுமையேற்றினால் இரைப்பை முதலிய உறுப்புகளெல்லாம் அதைத் தாங்கமாட்டாமல் பலவீனப்பட்டுப்போகின்றன. அதனாலேதான் இத்தேசத்தில் கொஞ்சம் வயதானவர்கள் உண்டவுணவு செம்மையாய் ஜீரணமாகாமல் தவிக்கிறார்கள்.

இவ்விஷயங்களை நன்றாய் ஆய்ந்துபார்க்குமளவில், பலவகை இறைச்சிகளை உணவிற் சேராமலே நாம் தேஹபலத்தையும் மனோபலத்தையும் நிலைநிறுத்திக்கொள்ளலாமென்பது நன்றாய்த் தெரிகிறது. நாம் உண்கிற சோற்றோடுகூட அவரை தொவரை முதலிய பருப்புவகைகளையும் பால் தயிர் மோர் நெய் முதலியவைகளையுஞ் சரியாகச் சேர்த்துப் புசித்துக்கொண்டு வருவோமானால் 300 தானியமணி அல்லது சுமார் 1½ ரூபாய் இடையுள்ள உப்புவாயு நாள்தோறும் நமது சரீரத்துள் சேருமென்பது நிச்சயம். சாதாரணமான ஸ்திதியிலிருக்கும்போது இது நமக்குப் போதுமானதே. பகலில் ஒருவேளை கோதுமை முதலிய புஞ்சைதானியங்களில் ஏதாவது ஒன்றையும் மற்ற இரண்டுவேளைகளில் கீழ்ச்சொன்ன சம்பாரங்களோடுகூட அரிசியும் உபயோகித்துக்கொண்டு வருவோமானால் நமது சரீரம் சவுக்கியமான நிலையிலிருந்துகொண்டிருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

சுகாதாரவிஷயம்—(கடைமொழி.)

இதுவரையில் நாம் பல ஸஞ்சிகைகளில் சுகாதாரத்தைப்பற்றிப் படித்த விஷயங்களை நினைத்துப்பார்ப்போம். நமது சரீரத்துக்குள், ஒரு விநோத யந்திரத்துள் நடப்பதுபோல், எவ்வளவு வியாபாரங்கள் நடந்தேறுகின்றன! நாம் விழித்திருந்தாலும் தூங்கினாலும் நடந்தாலும் உட்காந்திருந்தாலும் இவைகளைப்பற்றி நினைத்தாலும் நினையாதிருந்தாலும் மற்றெப்படியிருந்தாலும் நமது தேஹத்துள் பல வியாபாரங்களும் தமக்குத்தாமே நடந்துவருகின்றனவல்லவா? இவைகளையெல்லாம் நினைத்துப்பார்க்கும்போது, இவைகளைச் சரியாய் நடத்தி நம்மைப் பத்திரமாய்ப் பாதுகாக்கின்ற ஒரு சக்தி நமது தேஹத்துள் இருக்கவேண்டுவது அவசியமென்று நமது மனதில் உறுத்துகின்றதல்லவா?

ஒவ்வொரு ராத்திரியிலும் நாம் போய்ப் படுத்து மதிமயங்கித் தூங்குகிறோம். ஆயினும் அக்காலத்தில் நமது இருதயம் அடி

த்துக்கொள்வது அடங்கிப்போமென்ருவது, சுவாஸப்பை மூச்சுக்காற்றை ஏற்றுக்கொள்வது நின்றுவிடுமென்ருவது நாம் பயப்படுகிருேமா? அப்படியிருந்தும், நமது இருதயத்தை அடித்துக்கொள்ளும்படி செய்வதும், சுவாஸப்பையைச் சுவாஸம் விடும்படி செய்வதும் இவையென்று நமக்குத் தெரியாது. நாம் புசிக்கிருேம், பசிதீர்ந்துபோகின்றது. அதைப்பற்றி நமக்கு வேருென்றுந் தெரியாது. இப்படியே உலகத்தில் கோடாகோடி ஜனங்களும், தாங்கள் புசிக்கிற போஜனம் தங்களை இவ்வகையாய்ப் போஷிக்கிறதென்பதுகூடத் தெரியாமலே, உணவுகளை உண்டு வளர்ந்துகொண்டிருக்கிருர்கள்.

கந்தைமுதலியவைகளால் கடிதமுண்டாக்கவும், கருப்பஞ்சாற்றினின்றும் சர்க்கரையுண்டாக்கவும் உபயோகமான வியாபாரங்களைப் போலாகாமல் அவைகளைவிட வெகு அற்புதமாய் நாம் உண்கிற உணவுகளினின்றும் ரத்தத்தையுண்டாக்கத்தக்க சிறந்த வியாபாரமொன்று நமது தேகத்துள் நடக்கின்றதென்பதை ஒருவரும் நினைப்பதில்லை ஒவ்வொருவனுடைய வாழ்வும் சவுக்கியமும், ஒவ்வொருநிமிஷமும், நமது சரீரத்துள் அங்கங்கிருக்கிற சிறுவழிமூடிகளின் வசத்திலிருக்கின்றனவென்பதையும் அவர்கள் நினைப்பதில்லை. அந்த வழிமூடிகள் எப்படிப்பட்டவையென்கிறீர்களோ? அவைகளில் ஒன்று நாம் உண்கிற உணவைத் தப்பானவழியில் செல்லவொட்டாமல் காக்கின்றது; ஒன்று ஜீரணமாகாத உணவைக் குடல்களில் ஏறவொட்டாமல் இரைப்பையண்டை நின்று காத்திருக்கின்றது; ஒன்று இருதயத்தண்டை நின்று ரத்தத்தைத் தக்கபடி நாடிகளிற்செலுத்தி அவ்வாறு சென்றதை மறுபடி இருதயத்துட் புகாதபடி தடுக்கின்றது.

நாம் நொடிக்கு நொடி சுவாஸம் விட்டுக்கொண்டிருக்கிருேம். ஒருநிமிஷம் சும்மாவிருந்தால் பிராணன் போய்விடும்போலே தோன்றுகிறது. நாம் ஏன் மூச்சுவிடுகிருேமோ; அப்படி மூச்சுவிட்டு உட்கொள்ளுகிற காற்றில், நமது தேகத்தில் பிராணனையும் சூட்டையும் நிலைநிறுத்தத்தக்கதாய், என்ன இருக்கிறதோ அவைகளைத் தெரிந்துகொண்டவர்கள் இல்லவேயில்லை.

இப்படி நமது தேகத்திற்குள் நடக்கின்ற பல வேலைகளையும் நாமே நடத்தும்படி இருந்தாலென்ன? அந்த வேலையை நடத்த நாம் சற்று மறந்திருக்கும்போது இருதயம் அடித்துக்கொள்ள நமக்காகக் காத்திருந்தாலும், சுவாஸாசயம் காற்றை ஏற்றுக்கொள்ளும்படி அதை நாம் மலரச்செய்ய மறந்து அதனால் அது சற்றுநேரம் சுவாஸத்தை ஏற்றுக்கொள்ளாமலிருந்தாலும், அதனால் விளைகிற கெடுதி என்னவென்று கேட்கிறீர்களோ?

இருதயம் அடித்துக்கொள்வதுபோலவே நமது கையை ஒரு நிமிஷத்திற்கு 70 தடவைக்குக் குறையாமல் முன்னும் பின்னு

மாய் ஆட்டிப்பார்ப்போம். அப்படிச்செய்தால் கொஞ்சநேரத்தில் நோவெடுத்துக் களைத்து ஆட்டத்தை நிறுத்திவிடுவோமல்லவா? அந்தக் கையைப்போலவே தசை கொழுப்புமுதலியுவைகளால் அமைக்கப்பட்டிருந்தாலும், இருதயம்மாத்திரம் ஒரு போதும் ஓயாமல் அல்லும்பகலும் அடித்துக்கொண்டிருக்கிறது; ஒருபோதும் களைத்து நின்றுபோவதில்லை.

மேலும், கை கால்முதலிய வெளிஉறுப்புகள் அசைவதற்கும் உயிர்நிலைக்கும் சம்பந்தமில்லையாகையால் அவைகளை அசைப்பது நம்மிஷ்டமாய் விடப்பட்டிருக்கிறது. பிராணனுக்கு முக்கியாதாரமான உறுப்புகளை ஆட்டுவிப்பதுகூட நம்மதீனமாயிருக்குமானல், அப்போது நமக்குப் பிராணனிடத்தில் ஏதாவது சிறிது மதிப்புத்தோன்றுமா? நமது மனம் வேறு எதையாவது ஒரு பொருளாக நினைக்குமா? நாம் ஒருவர்க்கொருவர் ஒத்தாசைசெய்யக்கருதுவோமா? கிரமமாய்ச் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து, அனுபவிக்கவேண்டிய சுகங்களை அனுபவிப்போமா? ஒன்றுமில்லாதிருக்கையிலேயே தமக்குச் சமானம் ஒருவருமில்லையென்று நினைத்து ஒருவர்தலையை ஒருவர் காணக்கூடாதென்று குதிக்கிறார்களே.

ஆனல் நமது சரீரத்துக்குள்ளிருந்து இவ்வாறு இவைகளை ஆட்டுவிக்கிற சக்தி என்னவென்று கேட்கிறீர்களோ? அதைத்தான் நாம் ஜீவனென்று சொல்லுகிறோம். அந்த ஜீவன் எப்படிப்பட்டதோ நமக்குத் தெரியாது. ஆயினும் அது ஈச்வரகடாக்ஷத்தால் நேர்ந்ததென்றும், அவனுடைய கடாக்ஷத்தினலேதான் நாம் அசைவது நிற்பது முதலிய எல்லாக்காரியங்களும் நமது வாழ்க்கையும் நடக்கின்றனவென்றும் மாத்திரம் நமக்குத் தெரியும்.

நமது சரீரத்தை ஒரு கடிகாயந்திரத்திற்கொப்பாகச் சொல்லலாம். அதிலுள்ள ஒவ்வொரு சக்கரங்களையும் திருப்பி ஒவ்வொரு வில்லையும் அசையச்செய்து அதைச் சரியாய்ப் போய்க்கொண்டிருக்கும்படி செய்ய அதையுடையவனுக்கு எவ்வளவு சுவாதந்திரியமுண்டோ, அவ்வளவுதான் நமக்கும் நமது சரீரமாகிய யந்திரத்தை நடத்துகிறவிஷயத்தில் சுவாதந்திரியமுண்டு. கடிகாயந்திரம் சரியாய் ஆடிக்கொண்டிருப்பது நின்றுபோகாமல் அதைச் சுத்திசெய்து தகுந்தபடி திருப்பிவைத்துக்கொண்டிருப்பது எப்படி அதன் எஜமானனுடைய வசத்திலிருக்கிறதோ, அப்படியே இந்தச் சரீரத்தை நோய்நொடியில்லாமல் சுகமாயிருக்கும்படி வைத்துக்கொண்டிருப்பதை நம்மாதீனத்திலேயே கடவுள் விட்டிருக்கிறார். ஆதலால் நமது சரீரம் சவுக்கியமாயிருப்பதும் அசவுக்கியமாயிருப்பதும் அதனிடத்தில் நாம் எடுத்துக்கொள்ளுகிற ஜாக்கிரதையிலிருக்கிறதேயன்றி வேறொன்றிலுமில்லை.

நீதிமொழிகள்.

தன் வல்லமையை உள்ளபடி உணர்ந்திருப்பவன் ஒருவனு மில்லை.

தன் குற்றங்களையும் குறைகளையும் குணங்களையும் கண்டிப் பதைவிட, பிறருடைய பொல்லாச் செயல்களைக் கடிந்துபேசுவது எவர்க்கும் எளிது.

உண்மையும் சூரியனும் ஒக்கும்; பாதிநாள் சூரியன்போலவே சத்தியமும் சிறப்பாய் வெளித்தோன்றி உலகமெல்லாம் பிரகாசிப் பிக்கும்; பாதிநாள் இருப்பிடந்தெரியாமல் ஒளிந்துகிடக்கும்.

ஒருவன் அறிவீனனுவனென்று அறிவதற்கு ஒரேவழி போதும்; அறிவீனனுகானென்று அறிவதற்கோ பலவழியிருந்தாலும் போ தாது. தான்தோன்றியாய்த் தன்வழியே போம்படி விடப்பட்டிருப் பவனே மூடனென்று உணரலாம்.

தெய்வசங்கல்பம் ஒருபோதும் ஒருவனைக் கெடுக்கமுயல்வதில் லை. நல்லது கெட்டதாகிய இருவழிக்கும் வேண்டிய கருவிகளை மாத்திரம் அது தேடிவைத்திருக்கிறது. அவனவன் புத்திக்கு நே ராய்த் தோன்றுகிறவழியில் அவனவன் நடக்கிறுன். யானை தன் தலையில்தானே ஒரு விநோதம்போல் மண்ணைவாரிப் போட்டுக் கொள்வதுபோலவும், விட்டிற்பூச்சி வேண்டுமென்று தானே தீயில் விழுவதுபோலவும் ஒருவன் நல்லதிருக்கக் கெட்டவழியில் நடப் பனுயின் அதற்குத் தெய்வமென்னசெய்யுமாம்.

நமதிஷ்டப்படியே எல்லாம் நடப்பதாயிருந்தால், இவ்வுலகத் தில் எவரும் குழந்தையாகவேயிருந்து அவ்வளவு ஜீவனுக்கும் உணவுக்கு வேண்டுமளவு பாலுமிருக்கவேண்டும்; அதைவிட ஆனந்தம் வேறொன்றுமில்லை. சிறுபிராயத்தில் கள்ளங்கவடற்று உண்மையாய் நடப்பவர்களெல்லாம் முதிர்ந்தபிறகு எவ்வளவு பொல்லாதவர்களாகிறுர்கள்.

ஒருவன் எவ்வளவு புத்திமானுயிருந்தாலென்ன? எவ்வளவு சத்தியசந்தனுயிருந்தாலென்ன? ஒருதடவை சொன்னபடி நடவா னுயின் அந்தப் பிரசித்தியாலென்னபயன்?

செம்மையாய் வாழ்வதற்குவேண்டிய வழிதெரியாமல் விசே ஷமாய்ப் பொருள்விரயம்செய்தும் இவ்வுலகவாழ்க்கையை நரக யாதனைக்கு ஒப்பாக்கிக்கொள்கிறுர்கள்; வழியோடு வாழத்தெரிந்

தால் கொஞ்சம் பொருளைக்கொண்டே தேவேந்திரபோகமாய்ச் சுகமாக வாழலாம். இதற்கேற்ற வசனமொன்றுண்டு.

"ஒத்தகணவனு மொருநெல்லு முண்டானால்
சித்திரம்போலே குடிவாழ்க்கை செய்வேனன்."

அணுவளவேனுமறிவில்லாவர்கள் மேன்மேலும் எழுந்து துள்ளுவார்கள்; அவர்கள் எவ்வளவு துள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு, அறிவுமிகுந்தவர்கள் அடங்கித்தாழ்வார்கள்.

"மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதென்றே தாழுந் துலைக்கு."

பாண்டித்தியமும் விவேகமும் ஒன்றல்ல; ஜோதிடசாஸ்திரத்தின் நுட்பங்களையும், கணிதசாஸ்திரத்தின் அருமைகளையும், மற்றுமுள்ள ரசாயனசாஸ்திரம் ஔஷதிசாஸ்திரம் முதலியவைகளையும் நன்றாய்க் கற்றறிந்தவர்களும் விவேகமற்றிருப்பார்கள்.

ஒருவனுக்குத் தன்மனையாளைச் சீராய் வைத்துக்கொண்டிருப்பதற்கு வேண்டியவழியிருந்து நற்குண நற்செய்கையுள்ளவளாய் ஒருமனையாளும் வாய்ப்பாளானால், அவனுக்கு இவ்வுலகவாழ்க்கையில் குறை ஏதாவதொன்றுண்டோ?

"இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை."

எடுத்த கருமத்தை முடிக்கவேண்டுமென்று பிடிமானமுள்ளவனுக்குக் கைகூடாத பொருள் ஒன்றுமில்லை. துரதிர்ஷ்டமென்பது அவனைக் கண்டு அஞ்சிநிற்கும்.

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

பொல்லாங்கு செய்தவர்கள் பச்சாத்தாபப்படவேண்டுவது அவசியமே; ஆயினும் ஒரு குடியனுக்குக் குடித்ததனால் உண்டான வெறியும், காமுகனுக்குக் காமச்செயலினாலுண்டான பெருநோயும் பச்சாத்தாபத்தால் தணியுமோ?

பிரசித்தியென்பது இப்படிப்பட்டதென்று தெரியாமல் அநேகர் பிரசித்திசம்பாதிக்கவேண்டுமென்று பல தீச்செயல்கள் செய்து தம்பேரை வெளிக்குக் கொண்டுவருகிறார்கள்.

ஆசையென்பது ஒரு விபரீதகுணம். அது இப்படிப்பட்டதென்று வரையறுத்துக் கூறவும் கூடாது. அதை அடக்கியாளவும் மாளாது. அது, காட்டிற் பூத்த மல்லிகைமலர்போலவும், காட்டிற் காய்ந்த நிலவுபோலவும், தன் அழகையும் பெருமையையும் வீணாக்குகின்றது. அதுபற்றியன்றோ தாயுமானவரு மிங்ஙனங்கூறியிருக்கிறார்:—

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி யாளினுங்கடன்மீதிலே
ஆணைசெலவேநினைவ ரளகேசனிகராக வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்துரசவாத வித்தைக்கலைந்திடுவர் நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும்வேளையிற் பசிதீரவுண்பது முறங்குவதுமாகமுடியும்
உள்ளதேபோதுநா னெனக்குளறியே யொன்றைவிட்டொன்றுபற்றிப்
பாசக்கடற்குளே வீழாமன்மனதற்ற பரிசுத்தநிலையையருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே.

ஒருவனுக்கு நோயற்ற தேகமே நீங்காத செல்வம்; கபடற்ற மனதே குறையாத பாக்கியம்.

உலகத்தில் அநேகர் தாம்செய்யும் பல பிழைகளுக்கும் விதியின்மேற் பழிபோடுகிறார்கள். கள்ளநினைவாய்க் கொடுமைசெய்பவர்க்குச் சகாயமாய் விதியொன்று வாய்த்திருப்பது அதிசயமே.

சிறுவர்க்கான கதை.

வாலில்லாக் குரங்கும் ஒரு கழுதையும்.

ஒருநாள் ஒரு மரத்தின்மேல் வாலில்லாக் குரங்கொன்று தன் கையிலே சில பழங்களை வைத்துக்கொண்டு விநோதமாய்க் கடித்துத் தின்று கொட்டைகளைக் கீழே எறிந்துகொண்டிருந்தது. அந்தக் குரங்குக்குக் காது வெகு சிறிது; வால் அடியோடு இல்லவேயில்லை. தற்செயலாய் அவ்வழியேவந்த ஒரு கழுதை அதைப் பார்த்து, இது ஒரு விகாரமான ஜந்து என்று எண்ணிற்று. கழுதைக்கு நீண்டகாதும் நீண்டவாலும் இருப்பதைப் பார்த்த குரங்கும் அவ்விதமாகவே எண்ணிக்கொண்டது. கழுதை கெட்டியாய் கத்தவே, அதைக்கேட்ட குரங்கு கழுதையைப் பார்த்து: நீ ஏன் இப்படிக் கத்துகிறாயென்று கேட்டது. நான் உன்னைப் பார்த்துத்தான் கத்துகிறேன் என்று கழுதை சொல்லிற்று. உடனே குரங்குக்குக் கோபமுண்டாகி, நீ என்னைப்பார்த்துக் கத்துவானேன் என்றுகேட்க, அதற்குக் கழுதை: உனக்குக் காது வெகு சிறியதாயிருக்கிறபடியால், நீ ஒரு விகாரமான பிராணியாய்த் தோன்றுகிறாய்; மேலும் உனக்கு வாலேயில்லை; அதினாலே தான் எனக்கு இவ்வளவு சிரிப்புண்டாயிற்று என்று சொல்லிச் சிரித்தது. அதைக்கேட்டுக் குரங்கும் கீயா கீயா என்று கீச்சிட்டுத் தன் பல்லையிளித்துக் கூவிற்று. உடனே கழுதை மிகவும் கோபமடைந்து, நீ ஏன் என்னைப்பார்த்துப் பல்லையிளித்து அழகுகாண்பிக்கிறாயென்றது. அதற்குக் குரங்கு: நீண்டகாதும்,

நடக்கும்போதும் திரும்பும்போதும் ஒரு தடையாயிருக்கிற நீண்ட வாலுமுடைய உன்னைப் பார்க்கவே எனக்குச் சிரிப்புண்டாகிறது என்றது. அதைக்கேட்டுக் கழுதை அதிக கோபம் அடைந்து, குரங்கைப் பிடித்து உதைக்கலாமென்று எண்ணி அம்மாத்தைச் சுற்றிச்சுற்றி வந்தது. குரங்கோ அதிக தந்திரமுடையதாகையால் கீழேவராமல் மாத்தினுச்சியிலேயே இருந்துவிட்டது. கழுதை அதிக கோபத்தினால் வீணாய்க் கத்தி அடிமாத்தை உதைத்துக் கொண்டிருந்து கால் ஓய்ந்து ஓடிப்போய்விட்டது. அதைப்பார்த்துக் குரங்கு ஆ! ஆ! போகிறையோ? போ போ. நீ கழுதையானபடியால் உன்னைப்போல் எனக்கும் நீண்டவாலில்லையே என்று என்னைப்பார்த்து நீ ஊளையிட்டாய்; அதனால் எனக்கு வந்த கெடுதியென்ன? சந்திரனைப்பார்த்து நாய் குலைத்தால் நாய்க்குச் சேதமோ சந்திரனுக்குச் சேதமோ எனச்சொல்லிற்று.

சமாசாரம்.

ருஷியதுருக்கர் சண்டை.—ருஷியருக்கும் துருக்கருக்கும் யுத்தமுண்டாகி அநேகநாள்வரையில் கெலிபபுதோற்புதெரியாமல் இருதிறத்திலும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் அதிகமாய் உண்டானதுமன்றி, சிலகாலத்தில் ருஷியர்பக்கத்தில் வெற்றியுண்டாகுமென்றும், சிலகாலத்தில் துருக்கர் பக்கத்தில் வெற்றியுண்டாகுமென்றும், இப்படிப் பலபேர் பலவாறு நினைக்கும்படி வீரத்தனமும் உற்சாகமுமிகுந்து சண்டை நடந்துவந்ததென்பதை அந்தந்த மாதத்துப் புத்தகத்தில் தெரிவித்திருக்கிறோமல்லவா? இப்போது அந்த மகா யுத்தத்திற்கு முடிவுகாலம் சமீபித்திருப்பதாகத் தோன்றுகிறது. ருஷியர் அதிகமாய்த் துருக்கர்நாட்டில் ஊடுருவிச்சென்று அநேகம் பட்டணங்களைப் பிடித்துக்கொண்டு மேலோங்கியிருக்கிறார்கள். துருக்கரோ நாளுக்குநாள் வலிமைகுறைந்து இவ்வளவோடு விட்டுவிட்டாற்போதுமென்று பயந்து இருப்பிடம்விட்டு ஓடுகிறார்கள். இப்போது சமாதானப் பேச்சே அநேகமாய் நடந்துவருவதாகத் தெரியவருகின்றது.

சக்கரவர்த்திப்பட்டம்.—நாளது௵ ஜனவரி௴ 1௳ நமது மகாராணியார்க்குச் சக்கரவர்த்திப்பட்டங்கொடுத்ததினமாகையால், வருகிற ஜனவரி௴ 1௳யையும் புதுப்பட்டங்கொடுத்த தினமென்பதற்காக மிகவும் பெருமையாய்க் கொண்டாடி அநேகம் பிரபுக்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும், சுதேசராஜாக்களுக்கும், இன்னும் அநேகம் புத்திமான்களுக்கும் விசேஷமாய்ப் பட்டப்பெயர்களும் வெகுமதிகளும் கொடுக்கப்படுமாம்.

Printed at the C. K. S. Press.